பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

கடர்: 6 பிரமோதூத ஷூ பங்குனி ௴ 21 ௳ வியாழக்கிழமை [04-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 131

# 9 சிப்பாய்களின் சடலங்கள் காரைநகரில் புலிகளால் மீட்பு

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் அவை இன்று மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

நேற்றுப் பிற்பகல் 3. 30 மணியளவில் காரைநகரின் மேற்குப் பக்க கடற்கரையோரமாக ஐந்து விசைப்படகுகளில் வந்து இறங்கி மினி முகாம் ஒன்றை அமைக்க முற்பட்டதாகக் கூறப்படும் ஸ்ரீலங்கா படையினர் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் பல படையினர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்த ஒன்பது சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்தனர் பெருமளவு ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப் பட்டன.

மீட்கப்பட்ட சடலங்களும் ஆயுதங்களும் இன்று பகல் நல்லூர் மூத்திரைச் சந்தைப் பகுதியில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னர் மனிதாபிமான அடிப்படையில் இச்சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் ஸ்ரீலங்கா அரசிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைப்பர் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

நீலன்காடு, கருங்காலிப் பக்கமாக முன்னேற முயன்ற படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் கண்ணன் [அரியரட்ணம் ஜூட், மரியஜோர்ஜ் — சரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை] என்ற போராளி வீர மரணமடைந்தார்.

[உ-3-15]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

காரைநகரில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ஜி. பி. எம். [மெஷின் கன்] — 1
★ நேட்டோ ரவைகள் [லிங்குடன்] — 379
★ ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி — 2
★ ரம் மகஸீன் — 8
★ லிங் — 797
★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி — 1
★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி — 6
★ அதற்குரிய மகஸீன் — 6
★ ரி 81 ரகத் துப்பாக்கி — 2
★ அதற்குரிய மகஸீன் — 8
★ ஐ. எம். ரவைகள் — 895
★ 203 ரக பிஸ்டல் — 1
★ அதற்குரிய 40 எம். எம். ஷெல் — 21
★ 60 எம். எம். மோட்டார் — 1
★ அதற்குரிய ஷெல் — 7
★ மொபைல் செற் — 1
★ வோக்கி — 1 [உ-3]

## புதிய யாழ். அரச அதிபராக பொன்னம்பலம் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 4

தற்போது முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற்றும் திரு. கே. பொன்னம்பலம் இம்மாத இறுதி முதல் யாழ். அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அவருக்கு கொழும்பில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாக அறியவந்தது.

யாழ். அரச அதிபராகக் கடமையாற்றும் திரு. அன்ரன் அல்பிரட்டுக்கு உணவு, கப்பல் துறை துணை அமைச்சுச்செயலாளராக பதவி உயர்வு வழங்கும் கடிதமும் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## 30 விரிவுரையாளர்கள் வேலை இழக்கும் நிலை?

கடந்த பத்து மாதங்களாகக் கடமைக்குச் சமூகம் தராமல் இருக்கும் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 30 விரிவுரையாளர்கள் இம்மாத இறுதியுடன் வேலை இழக்கும் நிலை உருவாகியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்திருப்பதால் இவர்கள் கடமைக்குச் சமுகம் தராமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வேலைக்குத் திரும்பாது விட்டால் அவர்கள் வேலையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர் என்று யாழ். பல்கலைக் கழக மூதவையின் தீர்மானம் ஒன்று தெரிவிக்கிறது. [உ-3]

## வடபகுதிக்குக் கப்பலில் பணம் அனுப்பக் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மாவட்டத்துக்கு கப்பலில் பணம் அனுப்பப் புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக அறியவந்தது.

பருத்தித்துறைக்கு கப்பலில் பணம் கொண்டு வரப்பட்டதும் அங்கேயே வைத்து திணைக்களங்களின் காசோலைகளுக்கு கொடுப்பனவுகள் செய்யவேண்டும் என்றும்—

கப்பலிலிருந்து வங்கிகளுக்கு பணம் எடுத்துச் செல்லக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை—

யாழ். மாவட்டத்துக்கு மாதந்தோறும் ஏழு கோடி ரூபா பணம் அனுப்புவதற்கு ஏற்பாடாகியுள்ளது என்றும்—

இந்தப்பணத்தை இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் சமமாக வழங்க ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது. [உ-3]

## முச்சந்தி முரளி



வானத்தை விட்டால் அவையளுக்கு வேறு வழியில்லை... அதுதான்......!

## வவுனியாவில் மோதல்

வவுனியாவில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

கூடுவெந்தபுலவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது புளிதரித்த புளியங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பழையூர் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது மன்னார் வீதியில் உள்ள சாலம்பன் குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சம்பூரில் பல மீனவர்கள் பலி?

திருகோணமலை சம்பூர் கடற்பகுதியில் 30 சிறிய வள்ளங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சுமார் 30 முதல் 40 வரையான மீனவர்கள் இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு படகுகளில் வந்த ஒரு குழுவினர் இவர்களைப் பலவந்தமாக கரைக்குக்கூட்டி வந்து அங்கு வைத்து சுட்டும், வெட்டியும் கொன்றதாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது.

இத்தாக்குதலில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே உயிரிழந்தனர் என்றும்—

படுகாயமுற்ற ஆறு மீனவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது.

## விடாது விமானத் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 4

காரைநகர் கடற்படை முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்றிரவு வரை தொடர்ந்து மாறி மாறி விமானத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவிலும் பின்னர் 9 மணியளவிலும் மூன்று பொம்மர்கள் காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதியில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# குண்டு வீச்சை நிறுத்த படை அதிகாரிகள் மறுப்பு

## ஆனால் புதிய அணுகுமுறை பற்றி பிரட்மன்!

கொழும்பு, ஏப். 4

விமானத் தாக்குதல் நடத்தும் அணுகுமுறையில் மீள் சிந்தனை ஒன்று ஏற்பட்டிருப்பதாகவும்—

பிரச்சினையைப் புதிய முறையில் அணுகும் சாத்தியம் இருப்பதாகவும்—

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஆனால் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று படை அதிகாரிகள் வற்புறுத்தி வருகின்றனர்.

பி. பி. சி. வானொலியில் நேற்று ஒலிபரப்பான இலங்கை சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டது.

பி. பி. சியின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொரிஸ், ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோனைப் பேட்டி கண்டார்.

அப்போது வடக்கு-கிழக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வாங்கப்படும்

அரைப்போத்தல் திரவம் கொள்ளக்கூடிய சுத்தமான போத்தல்கள் வாங்கப்படும்: சிறிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை. மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி/5915]

### தவறிவிட்டது

31-3-91 அன்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் எனது பேர்ஸ் தவறிவிட்டது. அதற்குள் இந்திய அகதிகளுக்கான காட் அடையாள அட்டை இல. [336531101V] மூக்குக்கண்ணாடி என்பன இருந்தன. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கு. தங்கச்சியம்மா புங்குடுதீவு - 8. [16300]

காளியப்பு விசுவலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும் [553521106V], வேலைக்கான அடையாள அட்டையும் 1-4-91 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [16394]

சி. வாணிஸ்ரீ என்பவருடைய 696620598V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், பல்கலைக்கழக அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரிய விலாசத்தில் அல்லது யா/பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். [16296]

### வெளிநாட்டுப் பணம் மாற்றிக் கொடுத்தல்

எமது ஸ்தாபனத்தில் வெளிநாட்டுப் பணம் மாற்றிக் கொடுக்கப்படும். என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். ரவி அன் ராஜ் சில்க்ஸ், 77, பெரியகடை, யாழ்ப்பாணம். [சி/5908]

### G, C. E. (A/L) தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள்

பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளோடு பல வருடம் அனுபவம் பெற்றுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். விவரங்களுக்கு: R. பாலா, B Sc. [Cey] Dip-in-BD 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் [16305]

### காணவில்லை

25-3-91 தொடக்கம் சுப்பிரமணியம் சந்திரபாலன் என்பவரைக் காணவில்லை. இவரின் வயது 15 கடைசியாக சாம்பல் நிற காற்சட்டையும், மஞ்சள் நிற மேற்சட்டையும் அணிந்திருந்தார் கண்டவர்கள் மகேந்திரா, அச்சுக்கூட ஒழுங்கை, என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். [16299]

### கூறுவிலை

நல்லின பசுக்கன்றுகள் மூன்றும், நாம்பன் கன்றுகள் இரண்டும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 10-04-91க்கு முன்னர் கூறு விலையை சமர்ப்பிக்கவும். மேலதிக விவரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்: யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி: [சி/5900]

---

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில்

## முறைசாராக் கல்விப் பிரிவு கண்காட்சியில்

எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதி வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மில்க்வைற் சகாய விற்பனை அரைப் போத்தல் திரவ சவர்க்காரம் [Liquid Soap] ஒலிவ் ஸ்நானப் பவுடர் பக்கெற் ஒன்று. கீரை விதை, சரிசலாங்கண்ணி பொலித்தீன் பை ரூபா 50-00 மட்டுமே: [சி-5914]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52. ஸ்ரன்லி றோட், யாழ்ப்பாணம்.

A/L 91

மீட்டல் பிரிவு - 2

**DAY CLASSES**

ஆரம்பம்: 8-4-1991

(காலை 8 00 மணி)

பொருளியல் — திரு. கலாகரன்
வர்த்தகம் — திரு. இரட்ணம்
கணக்கியல் — திரு S.K. பிரபாகரன்
அளவையியல் — திருமதி மதி

மற்றும் அனைத்து பாடங்களும்

மு: குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது [இ-5902]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 04-06-1910

மறைவு: 06-03-1991

அமரர்

### கந்தப்பிள்ளை வேலாயுதபிள்ளை

[ஓய்வுபெற்ற பிரதம களஞ்சியப் பொறுப்பாளர், சிறைச்சாலைத் திணைக்களம், கண்டி, நீர்கொழும்பு, கொழும்பு]

அன்புடையீர்!

06-03-91 இல் இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப விளக்காகத் திகழ்ந்த உயர்திரு. கந்தப்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்களது 31 ஆம் நாள் கிரியை 05-04-91 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்று குடும்ப சமேதரராய் சமுகந்தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதோடு, மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இறுதி நாளில் அன்னாரை வைத்தியசாலையில் சேர்த்து உடனிருந்து சிகிச்சை அளித்து பல வகையாலும் உதவிகள் செய்த பெரியோர்களுக்கும், இறுதிக் கிரியைகள் சிறப்புடன் நடைபெற உதவிய பண்புள்ள, பாசமுள்ள அத்தனை பேருக்கும் எமது அறிவு உள்ளவரை நன்றிக் கடமைப்பாடுடையோம்.

"அப்பா உங்கள் திருவடித் தாமரைகள் எங்கள் இதயத்தை விட்டு என்றும் அகலா"

தங்கள் அன்புள்ள மனைவி
வே. பசுபதியம்மா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"வேலாயுதபிள்ளை இல்லம்
உரும்பராய் வடக்கு,
உரும்பராய். [15950]

---

## தமிழ்மொழித் தின விழா

மானிப்பாய், ஏப்ரல் 4 மருதனார்மடம் கோட்டக் கல்விப் பிரிவு தமிழ் மொழித் தின விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். [உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [இ-90]

---

மிக்க சக்தி கொண்ட அடிக்கட்டு உரமாகவும், பூச்சிக்கொல்லியாகவும் பயன் அளிப்பது

## நீமியா உரம்

இணுவில் திநநெல்வேலி, யாழ். நகர் அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது.

மில்க்வைற் - யாழ்ப்பாணம். [சி-5906]

---

## இலங்கை அதிபர்கள் சேவை

(Sri Lanka Principals' Service)

தரம் I, II, III க்கான

வரையறுத்த போட்டிப் பரீட்சை

1991 ஜூன் 1இல், 8 இல்

நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 20 — 04 — 1991 (9 a.m.)

பாடநெறி: இரகித்தல், பொது அறிவு, கல்விக்கொள்கையும் நிருவாகமும்

தகைமைகள்:

தரம் I: பட்டதாரி 7 வருட சேவை/பயிற்றப்பட்ட ஆசிரியர் 12 வருட சேவை.
தரம் II: பட்டதாரி 5 வருடசேவை / பயிற்றப்பட்ட ஆசிரியர் 10 வருட சேவை.
தரம் III: பயிற்றப்பட்ட ஆசிரியர் 5 வருடசேவை.

★ விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெறலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி: 19 — 04 — 1991 ★

1. விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில்
2. இலவச பாடக்குறிப்புகள் - வினா - விடைப் பயிற்சிகள்
3. கட்டணம் ரூபா 300/- [முழுப் பயிற்சிக்கும்]

விவரங்களுக்கு நேரில்:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.

[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-5909]

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 27 - 08 - 1903

இறப்பு: 04 - 04 - 1987

### வேலுப்பிள்ளை கதிரித்தம்பி

[முன்னாள் வின்சர் தியேட்டர் முகாமையாளர்]

அருகிருந்து அரவணைத்து அன்பு காட்டிய எங்கள் தந்தையே! நீங்கள் மறைந்து நாலு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் எங்கள் கவலைகள் எங்களை விட்டு ஓயவில்லை. இன்னும் விழிகளில் தெரியுது உங்கள் நிழல்உருவம்.

சாந்தி!

மனைவி, மக்கள்.

கைலாசபிள்ளையார்
கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [16295]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உள்ளூர் தொழில் நுட்பம்

இதனை இனித் திருத்த முடியாது — என்று கூறிக் கொழும்பில் கைவிடப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்ட ''எக்ஸ்றே'' இயந்திரம் ஒன்று, யாழ்ப்பாணத்தில் திருத்தப்பட்டிருக்கிறது! யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அதனைப் பயன்படுத்திய நோயாளருக்கு ''எக்ஸ்றே'' படமும் பிடிக்கப்படுகிறது.

எல்லாவற்றையும் கொழும்பிலேயே செய்ய முடியும். இங்கு இயலாது என்று நினைக்கும் எம்மவர்களின் சிலரின் கண்களை, இந்தச் செய்தி அகலத் திறக்கச் செய்யும் என நம்புகிறோம். அவர்களின் குருட்டு நம்பிக்கையை இது நிச்சயம் போக்கடிக்கும் எனவும் நம்பலாம்.

உணவுப் பொருளானாலும் சரி, வேறு எந்தப் பாவனைப் பொருளானாலும் சரி, கொழும்பிலிருந்து தான் வர வேண்டும்; அப்படி இல்லையேல் இங்கு பட்டினி, தட்டுப்பாடு என்ற நிலை நீண்ட காலமாகத் தமிழ்ப் பகுதிகளில் நிலவி வந்தது. அந்நிலை இப்போது மெது மெதுவாக நீக்கப்பட்டு வருகிறது உடனடியாக முற்றாக நீங்குவது கடினமேயாயினும். நிலைமை இப்போது திருப்திகரமாக உள்ளது என்று துணிந்து கூறலாம்.

தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்ற உணர்வு மக்களுக்கு ஓரளவேனும் பிறந்திருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியது தான். ஆனால் அந்த உணர்வு நிரந்தரமாகி மேலும் வளர்ச்சி அடைவதில் தான் பட்டினி, தட்டுப்பாடு ஆகிய இரண்டையும் தவிர்ப்பது தங்கியுள்ளது.

உணவு உற்பத்தியைப் போலவே தொழில்நுட்பம், கைத்தொழில் ஆகிய துறைகளிலும் எமது சொந்த உழைப்பில், மதிநுட்பத்தில் பலமாகக் காலூன்றக் கூடிய ஒரு நிலையை உருவாக்குவது அவசியம். இங்கே செய்ய இயலுமான அலுவல்களுக்கெல்லாம், கொழும்பிலேயே வசதி உண்டு; அல்லது அங்கே செய்வது தான் தரமானதாக, சிறப்பானதாக இருக்கும் என்ற வரட்டு எண்ணத்தை அகற்ற வேண்டும்.

சைக்கிள் ''டைனமோ'' மூலம் மின்விளக்கு எரிக்கவும், தண்ணீர் இறைக்கவும், குறைந்த அளவு மண்ணெண்ணெய்யுடன் விளக்கு எரிக்கவும் மாற்றுத் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, மண்ணெண்ணெய்யில் இயங்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியுடன் பெரிய இயந்திரங்கள் இயக்கப்படுகின்றன. அந்த மாற்றுத் தொழில் நுட்பங்களை உருவாக்கும் மதிநுட்பம் எம்மிடம் இருக்கும் போது, வழமையான தொழில் நுட்பத்துக்கான மூளைத் திறன் இல்லாமலா போய் விடும்?

எமது திறமையில் நம்பிக்கை வைக்காமல் எல்லாவற்றுக்கும் கொழும்பையும், வெளிநாடுகளையும் நம்பி இருப்பது பெரும் பேடித்தனமாகும். திருத்த முடியாது என்று கொழும்பில் கைவிடப்பட்ட இயந்திரத்துக்கு யாழ்ப்பாணத்திலேயே உபகரணங்களைத் தயாரித்து, அதனைத் திருத்திப் பாவிக்கக் கூடிய தொழில் நுணுக்க அறிவும் மதிநுட்பமும் இருக்கும் எம்மவர், தொழில் நுட்பத்தில் பின்னடைய நியாயமில்லை.

வாய்ப்பும், வசதியும் இருந்தால் தொழில்நுட்பத் துறையிலும் நாம் முன்னேறலாம். அதற்கான வசதிகளை உருவாக்குவது, மக்களின் மனப்பாங்கிலும், முயற்சியிலுமே தங்கியுள்ளது.

---

மிகக் குறுகிய கால அவகாசத்தால்

# 8 ஆம் புள்ளிக்குரிய பொருள்களை பெற முடியாது பலர் ஏமாற்றம்

உரும்பராய், ஏப்ரல் 4

உணவு முத்திரையின் 8 ஆம் புள்ளிக்குரிய பொருள்களைப் பாவனையாளர்கள் பெறுவதற்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதால் பலர் அவற்றைப் பெறத் தவறி உள்ளனர்.

இம் முத்திரைக்குரிய பொருள்களை பெறுவதற்கு மார்ச் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையே அவகாசம் வழங்கப்பட்டது.

30 ஆம் திகதிக்குப் பின்னர் பொருள்களைப் பெறச் சென்றவர்களுக்கு அவை வழங்கப்படவில்லை. இதனால் பாவனையாளர்கள் பலர் ஏமாற்றம் அடைந்தனர்.

சிலர் உணவு முத்திரையின் 7 ஆம் புள்ளிக்குரிய பொருள்களையும் எடுக்கத் தவறி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் உள்ள முத்திரையின் 7 ஆம், 8 ஆம் புள்ளிகளுக்குரிய பொருள்களைப் பெறத் தவறியோரை யாழ். செயலகத்துக்கு வந்து அலைய வேண்டாம் என்று யாழ். சமூகசேவைப் பகுதி உதவி அத்தியட்சகர் கோரியுள்ளார்.

உணவு முத்திரைக்கான பொருள் விநியோகத்தை நிறுத்தும் உத்தரவு கொழும்பில் இருந்தே வந்தது என்றும் திகதியை நீடிக்கும் அதிகாரம் தமக்குக் கிடையாது என்றும் அவர் கூறினார்.

இந்தப் புள்ளிகளுக்குப் பாவனையாளர் பொருள் பெற்றுக்கொள்ள மேலும் அவகாசம் வழங்கும்படி தாம் கொழும்பில் உள்ள சமூக சேவைப்பகுதி அத்தியட்சகருக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [இ-154]

பேராதனைப் பல்கலைக் கழக

## வெளிவாரிப் பரீட்சைகள் தமிழ்ப்பகுதிகளில் நடைபெறா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடைபெறமாட்டாது.

இத்தகவலை பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக் கழக உப-வேந்தருக்கு அறிவித்துள்ளது.

கொழும்பிலும், கண்டியிலும் மட்டுமே இந்தப் பரீட்சைகள் நடைபெறவிருப்பதால், தோற்றவிருக்கும் மாணவர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [உ-3]

## நாளைக்கு முன்னர் தபால்களை அனுப்புக!

குமண கப்பல் மூலம் தபால்களை அனுப்ப விரும்புவோர் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 00 மணிக்கு முன் யாழ். மாநகர சபைப் பகுதிக்கு உட்பட்ட தபால் பெட்டிகளில் தபால்களைச் சேர்க்குமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

குமண கப்பல் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறப்படும்.

பருத்தித்துறை தபால் நிலையத்தில் இடப்படும் கடிதங்களும் கடைசி நேரத்தில் சேகரிக்கப்பட்டு கப்பலில் சேர்க்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## 29 வடபகுதி இளைஞர்கள் நீதிமன்றத்தில் விடுவிப்பு

இருவாரங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 29 வடபகுதித் தமிழ் இளைஞர்களை மாளிகாகந்தை நீதிவான் கடந்த செவ்வாய் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கொழும்பு தெமட்டகொட பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் அந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். தங்கியிருந்ததற்கான சரியான காரணங்களைக் காட்ட அந்த இளைஞர்கள் தவறியபோதே அவர்கள் கைதானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

உ. அ. அதிபர் அலுவலகங்களில்

## போதிய ஊழியர் இல்லை; காகிதாதிகளும் இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

'யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் போதிய ஊழியர் இல்லை. போதிய காகிதாதிகள் இல்லை. இதனால் வேலைகள் தாமதமாகின்றன'

நேற்று முன்தினம் செயலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர் கூட்டத்தில் மேற்கண்டவாறு பிரஸ்தாபிக்கப்பட்டது

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடந்த கூட்டத்தில் சகல உதவி அரச அதிபர்களும் கூட்டாக இந்தக் கோரிக்கையை விடுத்தனர். [இ-3]

## கலைமாணிப் பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 4

1989 ஆம் ஆண்டுக்கான கலைமாணிப் பட்டப்பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப் பரீட்சையில் 96 பேர் சித்தியடைந்துள்ளனர். இதில் இரண்டாம் தரம் மேற்பிரிவில் 13 பேரும், இரண்டாம் தரம் கீழ்ப் பிரிவில் 18 பேரும், சாதாரண தரத்தில் 65 பேரும் சித்தியடைந்துள்ளனர்.

இரண்டாம் தரம் மேற்பிரிவில் சித்தி அடைந்தோர் விவரம் வருமாறு:

இ. திமோதி கிளெமென்ஸ், ஜி. எல். ஞானதேவா, ஆர். ஹிதாயா, எஸ். ரஞ்சிதா, எஸ் ஏ. கி. சித்தி நெலுவா, எம். எஸ். தாஜ் மொகமட், எம். விமலேசன், செல்வி [illegible], எஸ். ரேவதி, ரி. [illegible], கே. ராஜசேகர், கே. சுலோஜனாதேவி, ஆர். வாசுகி, ஏ. அன்ரன் ஜெயகுமார். [இ-த]

## மேலும் சுகாதாரப் பிரிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மேலும் ஏழு சுகாதார அதிகாரிகள் பிரிவுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இயங்கவிருக்கின்றன.

தற்சமயம் உள்ள ஏழு சுகாதார அதிகாரிகள் பிரிவுகளும் மக்கள் தொகைக்கேற்ப அதிகரிக்கப்படவுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒன்றாகவும் — 60 ஆயிரம் மக்களுக்கு ஒன்றாகவும் இவை [illegible] இயங்கும். [இ-3]

## படகுக் கட்டணம் மீண்டும் 50 சதம்

நெடுந்தீவு, ஏப்ரல் 4

நெடுந்தீவு - குறிகாட்டுவான் அரச படகுப் பயணிகளுக்கான கட்டணம் மீண்டும் வழமை நிலையை அடைந்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த எட்டு மாதங்களாக இக் கட்டணம் ரூபா இருபது வரை அதிகரிக்கப்பட்டிருந்தது.

தற்போது எரிபொருள் பிரச்சினை தீர்ந்ததையடுத்து வழமையான பயணக்கூலியான சதம் ஐம்பது மட்டுமே ஒரு பயணியிடம் அறவிடப்படுகின்றது.

சைக்கிள் ஒன்றுக்கான கட்டணமும் 50 சதம் மட்டுமே. [இ-111]

## 119 போராளிகள் காவலிலாம்

சென்னை, ஏப்ரல் 4

இந்தியாவில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் காவலில் வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் எண்ணிக்கை 119 என்று அறிவிக்கப்பட்டது.

கடைசியாக நேற்று முன் தினம் [செவ்வாய்] பருத்தித்துறையைச் சேர்ந்த நால்வர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை; ஆசிரியருக்கு பயிற்சி வகுப்பு

இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சைக்காக ஆசிரியர்களைத் தயார் செய்வதற்கான பயிற்சி வகுப்புக்களை நடத்தும் ஏற்பாடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகுப்புகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள், பிரபல கல்லூரி அதிபர்கள் ஆகியோர் விரிவுரையாற்றுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பமாகும் எனவும், இறுதி முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர், திகதிகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும் எனவும் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராசா தெரிவித்தார். [இ]

## சூரிய சக்திக் கார்; எரிபொருள் தேவையில்லை!

வாஷிங்டன், ஏப். 3

எரிபொருள் தேவையில்லை. இயந்திரமும் இல்லை!

அவை இரண்டையும் அறவே ஒதுக்கி விட்டு, ஓடக் கூடிய புதிய கார் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நவீன கார் சூரிய சக்தியினால் இயங்குகிறது!!

நாளொன்றுக்கு நூறு கிலோ மீட்டருக்குக் குறையாமல் ஓடக்கூடியதாக இந்தக் கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றைய கார்களுக்கு உள்ள ஏனைய சகல தொழில்நுட்பங்களும் இந்தக் காரிலும் உண்டு. ஆனால் புகைப்போக்கி இல்லை.

அண்மையில் வாஷிங்டனில் பரீட்சார்த்தமாக ஓடிய இந்தக் காரை, புளோரிடாவில் உள்ள தொழிற்சாலை ஒன்று உற்பத்தி செய்துள்ளது.

இதே தொழில் நுட்பத்தில் இயங்கும் பயணிகள் வாகனங்கள், வான்கள் என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றனவாம்.

ஒரு சொட்டு எரிபொருளும் இல்லாமல் ஓடக்கூடிய இந்தக் கார் அடுத்த வருடத்தில் சந்தைக்கு விற்பனைக்கு வந்துவிடுமாம். [அ]

## கம்யூ. வெற்றியை அடுத்து அல்பேனியாவில் குழப்பம்

திறானா, ஏப். 3

அல்பேனியாவில் கடந்த ஞாயிறு நடத்தப்பட்ட சுதந்திர பொதுத்தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றியீட்டியதைத் தொடர்ந்து தலைநகர் திறானாவில் கலவரம் ஏற்பட்டுள்ளது

தேர்தலில் மோசடிகள் செய்யப்பட்டதாகக் கூறி தோற்றுப்போன ஜனநாயகக் கட்சியின் தொண்டர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

அல்பேனிய பொதுத்தேர்தலில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி 60 சத வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியது தெரிந்ததே.

பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கு 40 சத வீத வாக்குகளே கிடைத்தன.

கிராமப் புறத்தொகுதிகளில் அதிகமான இடங்களை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றி இருந்தாலும் அதன் சார்பில் போட்டியிட்ட ஜனாதிபதி, வெளியுறவு அமைச்சர் உட்பட பல முக்கிய தலைவர்கள் தோல்வி அடைந்திருந்தனர். [இ-எ]

## சென்னை - லண்டன் விமானச்சேவை

சென்னை, ஏப்ரல் 4

சென்னையில் இருந்து லண்டன் செல்லும் நேரடி விமான சேவை செவ்வாயன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகை வரி நீக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப் 4

தமிழீழ விடுதலைப் புலிகளால் அமுல் செய்யப்பட்ட நகை வரி நீக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

''தமிழீழ மீட்பு நிதிக்கு தமிழீழ மக்கள் பங்களிப்புச் செய்து வருவதால் எம்மால் ஒரு பவுணுக்கு நூறு ரூபா என்ற அடிப்படையில் அறவிடப்பட்ட வரி அறவீடு நீக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எவரும் நகை சொள்வனவு செய்யும் போது மேற்படி வரியைச் செலுத்த வேண்டாமென வேண்டுகிறோம். நகை வியாபாரிகள் வரி நீக்கத்தை கருத்தில் கொண்டு, நகை கொள்வனவாளரிடம் வரி அறவிடக் கூடாதெனக் கேட்டுக் கொள்கிறோம்''— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3]

# கேரதீவு - சங்குப்பிட்டி துறைகளில் குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஏப். 4

நேற்று முன்தினம் மாலை 5-30 மணிக்கு கேரதீவு - சங்குப்பிட்டி இறங்கு துறைகளில் இரண்டு பொம்மர்கள் மாறிமாறி குண்டுகளை வீசித் தாக்குதல் நடாத்தின.

பொம்மர்கள் வட்டமிட்ட போதே இறங்கு துறையில் நின்ற பொதுமக்களும் வியாபாரிகளும் கடலுக்குள் பாய்ந்து கொண்டதால் உயிர் சேதம் ஏற்படவில்லை.

பத்துக்கு மேற்பட்ட சைக்கிள்களும், சாவி மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன: பல சைக்கிள்கள் பொருட்களுடன் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டன.

அண்மையில் திருத்தியமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பாதையும் பலத்த சேதத்திற்குள்ளானது. [உ-117]

# சுக்லா காங்கிரஸில்!

முன்னாள் வெளியுறவு அமைச்சர் வித்யா சரண் சுக்லா இந்திரா காங்கிரஸில் சேர்ந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான அரசாங்கத்தில் திரு சுக்லா வெளியுறவு அமைச்சர் பதவியை வகித்து வந்தார்.

கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் திரு சுக்லா உட்பட ஐந்து அமைச்சர்களை எம். பி. பதவி வகிக்கத் தகுதியற்றவர்கள் என்று சபாநாயகர் பதவி நீக்கம் செய்தார். அதனைத் தொடர்ந்து திரு. சுக்லா அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டியதாயிற்று.

''நிபந்தனையின்றி நான் காங்கிரஸில் சேர்ந்துள்ளேன்''— என்று திரு சுக்லா செய்தியாளரிடம் நேற்று தெரிவித்தார். [அ-எ]

# ஹெரோயின் கடத்தலில் 3 தமிழ் இளைஞர்கள் கைது

சென்னை, ஏப்ரல் 4

தமிழ்நாடு, நாகர்கோவில் இருந்து 38 கோடி ரூபா (இந்தியப் பணத்தில்) பெறுமதியான 38 கிலோ ஹெரோயின் போதைவஸ்துவை இலங்கைக்குக் கடத்த முயற்சித்த மூன்று இலங்கைத் தமிழரை சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

மூன்று நபர்களும் தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

போதைவஸ்து, சுங்க அதிகாரிகளினால் பறிமுதல் செய்யப்பட்டது.

பம்பாயில் இருந்து லொறி ஒன்றில் கண்ணாடிப் பெட்டிகளுக்கு இடையில் ஒளித்து வைக்கப்பட்டு, அப் போதை வஸ்து கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

# 3 சிப்பாய்கள் பலி!

கொழும்பு, ஏப். 4

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நேற்றுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் விடுதலைப்புலிகளுடனான மோதலில் அரசுப் படையின் மூன்று பேர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மன்னார் - நானாட்டானில் இரண்டு படையினரும், வவுனியா-வெட்டுப்புல்லுக்குளம் என்ற இடத்தில் ஒரு சிப்பாயும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# பாடசாலைகள் 12 திகதியே மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப் 4

யாழ். மாவட்டப் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக இம்மாதம் பன்னிரெண்டாம் திகதியே மூடப்படும் என்றும்—

முன்னர் அறிவிக்கப்பட்டது போல நாளை (5 ஆம் திகதி) மூடப்பட மாட்டாது என்றும்—

வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைக்காகப் பல பாடசாலைகள் தொடர்ந்து மே 15 ஆம் திகதி வரை மூடப்பட வேண்டி உள்ளன இந்நிலையில் முன்னதாகப் பாடசாலைகளை மூடினால் விடுமுறை நீண்டு விடும்-என்று பல அதிபர்கள் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே இத்திகதி மாற்றம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது. [அ-5]

# மிதிவெடி!

யாழ்ப்பாணம், ஏப் 4

நேற்று மாலை யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் பின் வீதிக்குச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கண்டுக்குழியைச் சேர்ந்த முருகர் வைத்திலிங்கம் (வயது 64) என்பவரே படுகாயமடைந்தவராவார். [உ-15]

# வீரமரணம்

கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது கோவில் போரதீவு— புன்னைக்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் 2 ஆவது லெப்ரினன்ட் அஜித் (இரத்தினசிங்கம் ரகுபரன்— கல்லடி, மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். [உ]

# டிராக்டர் சேவை

கொம்படிவெளியில் நீர்மட்டம் குறைந்துள்ளதால் இப்பாதையூடாக டிராக்டர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-117]

# விடாது...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் 11 மணியளவிலும் பின்னர் 12 மணியளவிலும் அவ்ரோ விமானம் ஒன்று காரைநகர் இறங்கு துறை, சீ-நோர் கட்டடப் பகுதிகளில் பீப்பாய்க் குண்டுகளை வீசியது.

பிற்பகல் மூன்று மணியளவில் இரண்டு ஹெலிகொப்டர்கள் அப்பகுதியில் சரமாரியான கலிபர் தாக்குதலை நடத்தின.

நேற்று மாலை 5-30 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்றும், பின்னர் ஆறு மணியளவில் இரண்டு பொம்மர்களும் காரைநகரின் பலபகுதிகளிலும் கண்மூடித்தனமாக குண்டுகளை வீசித்தள்ளின.

இதேசமயம்—

நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து இப்பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் விடாது ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தனர்.

விமானத் தாக்குதல்கள் நேற்றிரவும் தொடர்ந்தன.

இந்தத் தாக்குதல்களினால் பெருமளவு உடைமைச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்பட்டாலும் சேதங்கள் குறித்து விளக்கமான தகவல்கள் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை. [உ-3-15-125]

# குண்டுவீச்சை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பேரழிவைக் கொடுத்து வரும் விமானத் தாக்குதல்கள் பற்றி அவர் திரு. வீரக்கோனிடம் கேள்வி கேட்டார்.

அதற்கு திரு. வீரக்கோன் பதிலளிக்கையில் சொன்னதாவது:-

விமானத் தாக்குதல் பற்றி உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

### பொதுமக்கள் உயிரிழப்பு

இலக்குகளைச் சரியாகத் தாக்கும் தொழில் நுட்பத்திறன் பிழைப்பதன் காரணமாகச் சில சமயங்களில் பொதுமக்கள் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

இந்த அணுகு முறையில் மீள் சிந்தனை [Rethinking] ஒன்று ஏற்பட்டுள்ளது என்பதை நிச்சயமாகக் கூறுவேன் இது பலருக்கு மகிழ்ச்சி கொடுக்கும்.

தீவிர நடவடிக்கையான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலுக்குச் செல்லாது பிரச்சினையை புதிய முறையில் அணுகும் சாத்தியம் இருப்பதாக நான் நம்புகின்றேன்— என்றார்.

செய்தியாளர் திரு. மொரிஸ் அந்த நிகழ்ச்சியில் சொன்னதாவது;-

...ஆனால் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல் தொடர்ந்து நடத்தப்படவேண்டும் என்று சில படை அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். விடுதலைப் புலிகள் மீதான அழுத்தத்தை தொடர்ந்து வைத்திருக்க விமானக் குண்டுத் தாக்குதலை நடத்துவதுதான் ஒரே வழி என்று அந்த இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்— என்றார். [அ-எ]

# வவுனியாவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர். அவ்வேளை இரண்டு பொம்மர்கள் மற்றும் இரண்டு ஹெலிக்கொப்டர்களில் இருந்து வானத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்த இரு மோதல் சம்பவங்களின் போதும் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை.

சாலம்பன்குளம் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் மஞ்சித் (ரமேஷ் றொபேர்ட் - செட்டிகுளம்) வீரமரணமடைந்தார். [உ]


## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சோமசுந்தரஐயர் சாம்பசிவஐயர்

காரைநகர் மேற்கு மணற்காடு முத்துமாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோமசுந்தர ஐயர் சாம்பசிவ ஐயர் அவர்கள் 03 - 04 - 1991 புதன் கிழமை காலை 7 00 மணியளவில் சிவபதப்பேறு எய்தியுள்ளார். அவர்களது ஈமக்கிரியைகள் ''ஸ்ரீ குகன் மில்'' உடுவில், சுன்னாகத்தில் நடைபெற்றன இத்தகவலை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்

சிவஸ்ரீ சா. சோமசபேசக் குருக்கள்
பிரதம சிவாச்சார்யா,
அருள்மிகு சிவகாமி அம்மன் தேவஸ்தானம், இணுவில்

பிரம்மஸ்ரீ மு.ப. காங்கேய சர்மா
ஸ்ரீ குகன் மில், உடுவில், சுன்னாகம்

[16307]

### அன்னலக்ஷ்மி சிவபாதசுந்தரம்

கரணவாய் தெற்கைச் சேர்ந்த திருமதி அன்னலக்ஷ்மி 28 - 03 - 91 வியாழக்கிழமை காலை சிவபதமடைந்தார். ஈமக்கிரியைகள் அன்று மாலை கிராய் மயானத்தில் நடந்தேறியது அன்னார் திரு இரத்தினசிங்கம் சிவபாதசுந்தரத்தின் (அப்புக்காத்து) அன்பு மனைவியும், திரு யோகேந்திரநாதன் (முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர், கொழும்பு), திருமதி ரூபாவதி சிவகுருநாதன் (அதிபர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), சுரேந்திரநாதன் (லண்டன்), ஜெயலக்ஷ்மி (லதா) (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாக்ரெட், சிவகுருநாதன் (சிரேஷ்ட வரிமதிப்பாளர், கொழும்பு), பரமசுந்தரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இ. சிவபாதசுந்தரம் (கணவர்)

''அன்னகிரி''
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

[16297]

### செல்வி ஜெபராணி நல்லப்பா

தெல்லிப்பளையைச் சேர்ந்த செல்வி ஜெபராணி நல்லப்பா அவர்கள் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி G. C. நல்லப்பா ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற செல்வி ஜெயலட்சுமி, செல்வி ஜெபதேவி (இளைப்பாறிய ஆசிரியை, யூனியன் கல்லூரி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 4-4-91 அன்று மாலை 3 மணிக்கு தெல்லிப்பளையில் நடைபெறும்.

தகவல்:

P. டேவிட்

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

[16308]



நயினை செம்மணத்தம்புலம்

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

5-4-1991 ல் ஆரம்பமாக இருந்த வருடாந்த மகோற்சவம், தற்போதுள்ள சூழ்நிலையில் நடத்த முடியாதநிலை ஏற்பட்டிருப்பதால் பின்போடப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் அறியத்தருகிறோம். மகோற்சவம் ஆரம்பமாகும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

''அறங்காவல் சபை''
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,
நயினாதீவு.

[16353]



எமது மக்கள் படும் துயரங்கள் நீங்க
இறையருள் வேண்டி நடாத்தப்படும்

## சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை

இடம் : நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபம்
காலம் : 5 - 4 - 1991 வெள்ளிக்கிழமை
மாலை 4 00 மணி

அனைத்து மக்களையும் இப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— அமைப்புக் குழு

(சி/5916)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org